மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் நேற்று (17-4-2026) காலை 7 மணிக்கு தொடங்கி 142வது வட்டத்தில் வாக்குச் சேகரித்தார். இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ், வட்ட கழக செயலாளர் எம்.நாகா, காங்கிரஸ் ஜோதிபொன்னம்பலம், வி.சி.க.–ம.ஜேக்கப், தே.மு.தி.க –ஆனந்தன், ம.நீ.ம. – கதிர், எஸ்.டி.பி.ஐ. – அபுதாகிர், பிலால், இ.யூ. மு.லீக் – கவுஸ் ஃபேக், த.மு.மு.க சாகுல்ஹமீது, அப்துல் ஜபார், சி.பி.ஐ. – சிவா, சி.பி.எம்.–வேல்முருகன் உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியினர் பங்கேற்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதிக்குட்பட்ட தெற்கு பகுதியில் உள்ள வார்டு 28ல் பொதுமக்களின் பெரும் ஆதரவோடு மாதவரம் எஸ்.சுதர்சனம் பரப்புரை மேற்கொண்டார். இந்நிகழ்வில் தெற்கு பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

துறைமுகம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி

வேட்பாளர் பி.கே. சேகர்பாபு 54 வது வார்டில் வாக்கு சேகரித்தார்!

சென்னை, ஏப்.18-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பெண்களின் முன்னேற்றத்திற்காக மாணவர்களின் வாழ்வாதாரத்திற்காக, நீட் கொடுமையால் மறைந்த மாணவி அனிதா பெயரில் அனிதா அச்சுவர்ஸ் அகாடமி துவங்கி தையல் பயிற்சி, அழகு கலை பயிற்சி, TALLY கணினி பயிற்சிகள் கொடுத்து அவர்கள் சொந்த காலில் நிற்க வழி வகை செய்தாரோ, அதே அடிப்படையில் துறைமுகம் தொகுதியில் வினிம்பு நிலை மக்களின் முன்னேற்றத்திற்காக அன்னை தயாளு அம்மாள் பெயரில் பயிற்சி பள்ளி துவங்கி அப்பயிற்சி பள்ளி மூலம் தையல் பயிற்சி, அழகு கலை பயிற்சி, மற்றும் மாணவ மாணவிகளுக்கு கணினி பயிற்சி (TALLY) வகுப்புகள் நடத்தி பயிற்சி முடிந்தவுடன் தையல் பயிற்சி முடித்தவர்களுக்கு தையல் இயந்திரமும், TALLY பயிற்சி முடித்தவர்களுக்கு மடிக் கணினியும்.. அழகு கலை பயிற்சி முடித்தவர்களுக்கு சுழல் நாற்காலி மற்றும் உபகரணங்களுடன் சான்றிதழ்களும் அளித்து அவர்கள் சொந்தமாக தொழில் தொடங்குவதற்கு காரணமானவர்.

இந்த அன்னை தயாளு அம்மாள் தொண்டு நிறுவனம் 2019 இல் தொடங்கப்பட்டு

இதுநாள்வரை 3450 பெண்கள் தையல் பயிற்சி பெற்றும், 1965 மாணவர்கள் கணினி பயிற்சி பெற்றும், 229 பெண்கள் அழகு கலை பயிற்சி முடித்தும் கிட்டத்தட்ட 5644 பேர் இப்பயிற்சி பள்ளி மூலம் பயன் பெற்றுள்ளார்கள் என்பதை பெருமையோடு குறிப்பிட்டு மேலும் இந்த ஆண்டு 600 க்கும் மேற்பட்ட பெண்கள், மாணவ மாணவிகள் இந்த பயிற்சி பள்ளியில் படிப்பதையும் சுட்டி காட்டினார்..

தொடர்ந்து 54 வது வார்டில் பெத்து தெரு திவான் பகதூர் பூங்காவை புதுப்பித்தும் , அத்தெருக்களில் மழை நீர் கால்வாய்கள் கட்டியதையும்.. தங்கசாலை தெருவில் மழை நீர் தேங்காமல் நிற்பதற்காக புதிய மழை நீர் கால்வாய்களும்.. சிறிய விட்ட கழிவுநீர் குழாய்களை மாற்றி பெரிய விட்ட அளவிளான குழாய் களை அமைத்தும்.. தங்கசாலை தெரு மற்றும் சுற்றியுள்ள பகுதியில் உள்ள கோயில்கள் குறிப்பாக அங்காள பரமேஸ்வரி கோயில், மலைக்கோயில், முத்துமாரியம்மன் கோயில், தாது குருசாமி முருகர் கோவில், அரங்கநாத சுவாமி கோயில், ஆதிபுரீஸ்வரர் கோயில், ஸ்ரீ ராமர் கோயில்கள் என ஏறத்தாழ 50 கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தியதை பெருமையாக குறிப்பிட்டும்.. கொண்டயார் தெரு , டெலிகிராப் லேன் பகுதிகளில் மழை நீர் கால்வாய்கள் கட்டியதையும், திருப்பள்ளி தெருவில் நவீன ஏசி பஸ் ஸ்டாண்டும், 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த மருத்துவமனை இடித்து புதிய மகப்பேறு மருத்துவமனை கட்டிக் கொடுத்ததையும் இவ்வார்டில் இருந்த பழைய மின் மாற்றிகளையெல்லாம் மாற்றி அமைத்து நவீன தொழில்நுட்பம் கொண்ட RMU க்களாக மாற்றப்பட்டதால் மின்சாரத் தடை என்பது குறைக்கப்பட்டுள்ளதையும்.. மேலும் இவ்வார்டில் புதிய நடுநிலைப் பள்ளி, முதல்வர் படைப்பகம் , உட்வார்ப் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தது என 54 வார்டில் செய்யப்பட்ட பணிகளை எடுத்துச் சொல்லி மேலும் இப்பணிகள் தொடர உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து உங்களின் வேட்பாளராக.. நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருபவராக உள்ள பி.கே.சேகர்பாபு ஆகிய என்னை இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக மீண்டும் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த வாக்கு சேகரிப்பில் பகுதி கழகச் செயலாளர் எஸ் முரளி எஸ் ராஜசேகர் இரா நரேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் தலைமை கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பெருங்களத்தூர் தெற்கு – வடக்கு பகுதிகளில், கழக வேட்பாளர்

மருத்துவர். ஆர்.எஸ்.கிருத்திகாதேவியை ஆதரித்து எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தீவிர வாக்கு சேகரிப்பு!

பகுதிச் செயலாளர்கள் எஸ்.சேகர் - டி.காமராஜ் அறிக்கை!

தாம்பரம், ஏப்.18-

தாம்பரம் சட்டமன்றத் தொகுதி,மதச்சார்பற்ற முற் போக்கு கூட்டணி, கழக வெற்றி வேட்பாளர், மருத்துவர் ஆர்.எஸ்.கிருத்திகாதேவி இன்று (18.04.2026 - சனிக்கிழமை) காலை 7.00 மணிக்கு,55வது வட்டம், பெரியார் சமத்துவபுரத்தில் இருந்து 56, 57, 58, 59, 61வது வட்டம், பீர்க்கன் கரணை, கே.கே.நகரில் முடிவுருகிறது.

மேற்கு தாம்பரம், மாலை 4 மணியளவில், அனைத்து வட்டங்களிலும், விடுபட்டு போன இடங்களில்,வாக்கு சேகரிப்பு, நலச்சங்க நிர்வாகிகள் சந்திப்பு, தாம்பரம் சண்முகம் சாலையில், வணிக கடைகளில், வாக்கு சேகரிப்பு, நடைபெற உள்ளது.

மேற்படி நிகழ்ச்சிகளில் தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மாநகர மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தொகுதி பார்வையாளர்கள் என்.மருது கணேஷ், பரிதிஇளம்சுருதி மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு, கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, உள்ளிட்ட மாவட்டம், மாநகர, பகுதி, வட்ட கழக, அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள், பொதுமக்கள், அனைவரும் இருசக்கர வாகனங்களில், கழக கொடிகள்,உட்பட கூட்டணி கட்சிகள் கொடிகளுடன், அணிவகுத்து, தவறாமல் கலந்து கொண்டு, பின்பு நடை பெறுகின்ற பொதுக்கூட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறும், பகுதி கழக செயலாளர்கள் எஸ்.சேகர், டி.காமராஜ் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சைதாப்பேட்டை கொத்தவால்சாவடி தெருவில்

கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியனை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

வாகை சந்திரசேகர் உரையாற்றுகிறார்!

சென்னை, ஏப்.18-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் மா.சுப்பிரமணியனை ஆதரித்து இன்று (18-4-2026 - சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் சைதை மேற்கு பகுதி 142 ஆவது வட்டம் கொத்தவால் சாவடி தெருவில் நடைபெறும் வாக்கு சேகரிப்பு இசை நிகழ்ச்சியில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில செயலாளர் வாகை சந்திரசேகர் வாக்கு சேகரித்து உரையாற்றுகிறார். எனவே இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள், தோழர்கள், தொண்டர்கள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிக் கொள்கிறோம்.

இவ்வாறு மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்கு பகுதி, 169வது வட்டம் வேளச்சேரி சாலையில் அமைந்துள்ள பள்ளிவாசலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வெல்லும் வேட்பாளர் மா.சுப்பிரமணியன் அவர்களை ஆதரித்து 'உதயசூரியன்' சின்னத்தில் துணை மேயர் மு.மகேஷ்குமார் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் வட்ட செயலாளர் எல்.ஆரோக்கியராஜ், வட்ட கழக நிர்வாகிகள் அ.ஆரி, இரா.தமிழ்வாணன், துரை சரவணன், சைதை ஆ. விக்டர், சூரியன் பிரபு, ஈ.மதனசேகரன், சே.அருண், ஜோ.சசிகுமார், அ.தமிழரசன், ரஷித், மேகநாதன், வீடியோ சரவணன் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

மதுரவாயல் வடக்கு பகுதி, மதுரவாயல் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் காரம்பாக்கம் க. கணபதி, 145வது வட்டம் நெற்குன்றம் பகுதியில் வாக்கு சேகரித்தார்.இதில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், 145வது வட்ட செயலாளர் நெற்கை ப.ஆலன், 144வது வட்ட செயலாளர் எம்.இ.ஸ்டாலின், பகுதி அவைதலைவர் ஆர்.கர்னல், அயலக அணி பகுதி அமைப்பாளர் ம.சுதாகர் ஆகியோர் வேட்பாளருக்கு மாலை அணிவித்து வீரவாள் கொடுத்து சிறப்பான வரவேற்ப்பளித்தனர்.

ஜி.கே.இனியன் ஏற்பாடு! ச.அற்புதராஜ் தலைமை!

களத்தில் இளைஞர் அணி – புழல் ஒன்றியத்தில் வேட்பாளர்

மாதவரம் சுதர்சனத்துக்கு உற்சாக வரவேற்பு!

250க்கும் மேற்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் இருசக்கர வாகனத்தில் பிரச்சாரம்!

சென்னை, ஏப்.18

களத்தில் இளைஞர் அணி என்ற தலைப்பில் மாதவரம் சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனத்துக்கு சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றியத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் ச.அற்புதராஜ் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் ஆலோசனைப்படி சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜி.கே. இனியன் ஏற்பாட்டில் 250க்கும் மேற்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுடன் டி-ஷர்ட் அணிந்து இருசக்கர வாகனத்தில் கருப்பு சிவப்பு கொடி, மாதவரம் எஸ்.சுதர்சனம் கொடி பதக்கை பிடித்துக் கொண்டு இளைஞர்கள் சிறப்பான முறையில் வாக்கு சேகரித்தனர்.

இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் மண்டல குழு தலைவர் வட்டக் கழகச் செயலாளர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, தலைமையில் வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் பாகமுகவர்கள் பாக பணியாளர்கள் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேதாஜி நகர் 5வது தெரு நடைபெற்றது. தொகுதி பொறுப்பாளர் சுபா.சந்திரசேகர், ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆலோசனை வழங்கினர். எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், ஏ.டி.மணி, மாஸ்.டி.வெங்கடேசன், எம்.லோகநாதன், கோவிந்தராஜ், பி.சீனிவாசன், வழக்கறிஞர் எஸ்.சரவணகுமார், ஏ.முருகேசன், கே.சி.ராஜா, எஸ்.கிருஷ்ணன், எஸ்.ராஜா, எம்.விமலா, எம்.பி.பாலு, ஏ.ஆனந்தன், ஏமோகன், எஸ்.கமருதீன், எல்.சந்ரு, எஸ்.சக்திவேல், கே.ஜானகிராமன், மீஞ்சூர்முகுந்தன், ஜான்கென்னடி, ப.தேவராஜ், ப.தாமோதரன், எம்.மணிகண்டன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் கழக வேட்பாளர் கே.எஸ்.ரவிச்சந்திரனை ஆதரித்து கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி 73வது வட்டத்தில் நடைபெற்ற தெருமுனை கூட்டத்தில் வாக்குகள் சேகரித்தார். வட்ட கழக செயலாளர் தமிம்பாய் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சித் தோழர்கள் உடன் இருந்தனர்.

பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமையில்

124 'அ' வட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு வேண்டுகோள்!

சென்னை, ஏப். 18-

124 அ வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 124வது அ வட்ட செயற்குழு கூட்டம், மயிலை தொகுதி வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து கழக தலைவர் தமிழ் நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரச்சாரம் செய்வது தொடர்பாக சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி தலைமையில் 124 அ வட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு ஆகிய எனது முன்னிலையில் வட்ட செயற்குழு ஆலோசனைக் கூட்டம் இன்று 18.04.2026 காலை 11 மணியளவில் மயிலை தொகுதி தேர்தல் பணிமனையில் நடைபெற உள்ளது.

ஆகவே 124வது அ வட்டத்தை சார்ந்த மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக தலைவர் மயிலை தொகுதி எல்டாம்ஸ் சாலையில் பிரச்சாரம் செய்வது தொடர்பாக

இவ்வாறு 124 அ வட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆலந்தூர் சட்டமன்ற மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் தா .மோ. அன்பரசனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு ஆலந்தூர் உள்ள இஸ்லாமிய பெருமக்களிடம் ஆலந்தூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு. டி. பிரகாஷ் வாக்கு சேகரித்தார்கள் ,உடன் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.டி.பூபாலன்,மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கலாநிதி குணாளன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சி.வாசிம்ராஜா,மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பால.அமுதநாதன், மாவட்ட அமைப்புசாரா அணி துணை அமைப்பாளர் சி.கந்தன்,பகுதி அமைப்பாளர் மோ. கவிகுமார்,துணை அமைப்பாளர்கள் ஜெ.பாலமுருகன், அ.நரேஷ்குமார், காங்கிரஸ் ஆவின் ஆனந்த்,மற்றும் மாணவர் அணி இளைஞரணி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மயிலை மேற்கு பகுதி இலக்கிய அணி சார்பில் 121 வது வட்டத்தில் வட்டச் செயலாளர் ராஜவேல், மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் முன்னிலையிலும் மயிலை மேற்கு பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் க.கணபதி தலைமையில், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை இணைந்து மயிலாப்பூர் வெற்றி வேட்பாளர் த.வேலுவை ஆதரித்து வீடு வீடாக சென்று வாக்கு சேகரிப்பு நடைபெற்றது. இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் மயிலை மேற்கு பகுதி இலக்கிய அணி சார்ந்த தலைவர் பி.எஸ்.ஆறுமுகம், துணை அமைப்பாளர் சிங்காரவேல், இந்திரகுமார், சண்முகம், கலை இலக்கிய அமைப்பாளர் அனு, ஜிம் ஜிம் ரவி, மற்றும் வட்டத் துணைச் செயலாளர் மற்றும் வட்டக் கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.